RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

DOI: 10.54392/ijot2612

# The Philosophy of Thiruvalluvar and the doctrine of God

**P. Praburam** [a, *]

[a] Department of Tamil, Kongunadu Arts and Science College(Autonomous), Coimbatore-641029, Tamil Nadu, India
*Corresponding author Email: rarulraj108@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2612
Received: 23-11-2025; Revised: 05-01-2026; Accepted: 19-01-2026; Published: 27-01-2026

**Abstract:** By understanding the context of the Thirukkural and the philosophy of God, one can grasp the principles that the author of the text attempts to convey. If one approaches the Thirukkural merely as a book of ethics, which speaks of moral values applicable to all parties, the deeper underlying meanings of the text cannot be uncovered. Therefore, this article explores the notion that the author, Thiruvalluvar, created the Kural against a backdrop of specific religious influences.

**Keywords:** Thirukkural, Thiruvalluvar, Philosophy, God, Ethics, Values

# திருவள்ளுவரின் சமயமும் கடவுள் கொள்கையும்

**பு. பிரபுராம்** [அ *]

[அ] தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்-641029, தமிழ்நாடு, இந்தியா

## முன்னுரை

திருக்குறளின் சமயத்தையும் கடவுள் கோட்பாட்டையும் உணர்ந்தால் மட்டுமே அந்நூலாசிரியர் கூறத் துணியும் நீதிகளை நாம் அறிய இயலும். வெறுமனே திருக்குறள் ஒரு நீதிநூல், அது அனைத்துத் தரப்பினருக்குமான அறக்கருத்துகளை உரைக்கிறது என்ற பொதுப் பார்வையில் நூலை அணுகினால், அதன் உள்ளார்ந்த கருத்தலகுகளை வெளிக்கொணர இயலாது. ஆகவே திருவள்ளுவர் என்ற படைப்பாளி எச்சமயப் பின்புலத்தில் நின்று குறளைப் படைத்தார் என்று இக்கட்டுரை ஆராய்கிறது.

திருக்குறளில் காணலாகும் கடவுள் குறித்து ஆராயப் புகுங்கால், முதற்கண் திருவள்ளுவரின் சமயம் குறித்துக் காணவேண்டும். 1330 குறட்பாக்களில், ஒரே ஒரு குறட்பா மட்டும் சமண சமயம் குறித்த நேரடியான செய்தியினை அளிக்கிறது.

“கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்

குழாஅத்துப் பேதை புகல்” (குறள்-840)

பொருட்பாலில் ‘பேதைமை’ என்ற அதிகாரத்தில் உள்ள இக்குறளுக்கு உரையாசிரியர்கள் வழங்கும் விளக்கங்களைக் காண்போம். “சான்றோர் அவையின்கண் பேதையாயினான் புகுதல், தூய அல்ல மிதித்த காலை, இன்பந்தரும் அமளிக் கண்ணே வைத்தாற் போலும்” (பரிமேலழகர்), “கழுவாத காலைப் பள்ளியின்கண் வைத்தாற்போலும், சான்றோர் அவையின்கண் பேதை புகுந்து கூடியிருத்தல்” (மணக்குடவர்), “சான்றோரின் கூட்டத்தில் பேதை புகுதல், ஒருவன் தூய்மையில்லாதவற்றை மிதித்துக் கழுவாத காலைப் படுக்கையிற் வைத்தாற் போன்றது” (Varatharasanaar, 1994) பேதையானவன் அறிவொழுக்கங்களால் நிறைந்த பெரியோர் அவைக்கண்

புகுதல், கழுவித் துப்புரவு செய்யாத காலைத் தெய்வ நிலையமான கோவிற்குள் வைத்தாற் போலும்" (தேவநேயப் பாவாணர்) எனப் பலவாறு முன்னோர் உரை வகுத்துள்ளனர். இக்குறளில் கழாஅக்கால் என்பது இடக்கரடக்கு. தூய்மையற்ற கால் என்று கொள்வோம். பள்ளி என்ற சொல்லுக்கு, இன்பந்தரும் அமளி என்று பரிமேலழகரும், பள்ளி என்று நேர்பொருளில் மணக்குடவரும், படுக்கை என்று மு.வரதராசனாரும், தெய்வ நிலையமான கோவில் என்று பாவாணரும் விளக்கம் தந்துள்ளனர். இவ்விளக்கங்களை மறுவாசிப்பிற்கு உட்படுத்த வேண்டியுள்ளது. 'பள்ளி' என்ற சொல் சமணர்க்கே உரித்தானதாகும். இக்குறள் சுட்டும் பள்ளி என்பது சமணத் துறவியர் தங்கியிருந்த பகுதியையே குறிக்கும். 'புகழ்' என்ற சொல்விளக்கத்திற்கேற்ப, அச்சான்றோர் தங்கியிருந்த பகுதிக்குள் தூய்மையுடன் புகுதல் வேண்டும் என்பதே குறட்கருத்து. இதுதவிர வேறு எக்குறளிலும் எச்சமயம் குறித்த நேரடியான தரவும் அகப்படவில்லை.

பள்ளி என்ற சொல்லை மட்டுமே வைத்துக்கொண்டு வள்ளுவம் சமணநூல் என்று கூறிவிட இயலுமா என்பது இயல்பாக எழும் ஐயம்தான். ஆயின் வள்ளுவத்தில் உள்ள பிறவிக் கோட்பாட்டை உற்று நோக்கையில், அது சமண சித்தாந்தத்தின் சாரமே என்று அறுதி செய்ய முடிகின்றது.

## வள்ளுவத்தில் சமணத்தின் பிறவிக் கோட்பாடு

வீடுபேற்றை நோக்கிய உயிரின் பயணத்திற்கான வழிவகைகளே சமணத்தின் பிறவிக் கோட்பாடாகும். திருக்குறளில் சமணத்தின் பிறவிக் கோட்பாடு 'சீவகசிந்தாமணியில்' பதிவு செய்யப்பட்டுள்ளதைப் போன்று முழுமையாக விளக்கம்பெறவில்லை. ஆயினும் பிறவி, உயிர், உடல், நல்வினை, தீவினை, தேவகதி, நரககதி, வீடுபேறு ஆகியன குறித்த விளக்கங்கள் இரத்தினச் சுருக்கமாக இடம்பெற்றுள்ளன.

## சமணத்தில் உயிரும் உடலும்

இந்தியத் தத்துவவியலில் 'உயிர்' என்ற கருத்தாக்கம் உருளும் தேர்ச் சக்கரத்திற்கு அச்சாணி போன்றது. 'உயிர்' என்ற ஒன்றைச் சுற்றியே இந்தியச் சமயங்களின் சித்தாந்தங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அனைத்துச் சமயங்களும் 'உயிர்' என்ற ஒன்றை ஏற்கின்றன. அவ்வகையில் சமண சித்தாந்தக் கட்டமைப்பின் அனைத்துத் தரப்பிலும் உயிரின் இயக்கம்தான் அடிநாதமாகும். உயிர் என்பது 'உன்னதமான தூய ஒன்று' என்கிறது சமணம். உயிரை அறியாமைத் திரை மறைக்கையில் அது திரிபு வடிவப் பண்புகளைப் பெறுகின்றது. அப்பண்புகளின் செயலாற்றலால் புத்கலப் பொருள்களின் மீது அவாக் கொள்ளும் உயிர், அவற்றின் பண்புகளை அடைகின்றது. தன் தூய பண்பில் நிகழும் மாற்றத்தால் உயிர் நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளைச் செய்கிறது. அதனால் அவற்றால் விளையும் நல்ல, தீய பலன்கள் உயிரை வந்தடைகின்றன. ஆகவே வினைப் பலன்களால் உயிர் மனிதகதி, தேவகதி, விலங்குகதி, நரககதி ஆகிய கதிகளில் வெவ்வேறு உடல்களைப் பெற்றுப் பிறந்து, இறந்து உழல்கிறது. மனிதகதியில் ஆண் உடலை அடைந்த உயிர் துறவேற்றுக் கடுந்தவம் இயற்றி, வினைகள் வருகின்ற பாதைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும். பின் ஏற்கனவே தன்னுள் கலந்துள்ள இருவினைப் பலன்களை முற்றும் உதிர்த்தால் உயிரானது வீடுபேறு என்னும் பிறவா நிலையை அடையும். இத்தத்துவவியலே சமணத்தின் 'நவபதார்த்தச் சித்தாந்தம்' ஆகும்.

## திருக்குறளில் உயிர் - உடல் கோட்பாடு

திருக்குறளுக்கு உலகப் பொதுமறை என்ற பெயரை நாம் இட்டு வழங்கலாம். ஆயின் அதனுள் உள்ளார்ந்த சமயப் பின்புலம் இருக்கத்தான் செய்கிறது. ஒரு இலக்கியம் உயிர் என்ற ஒன்றை ஏற்றுக்கொள்ளும்போது அது சமயம் சார்ந்ததாக உருப்பெறுகிறது. அவ்வகையில் திருவள்ளுவர் 'உயிர்' என்பது 'உள்ளது' என்று ஏற்கிறார். உயிரினின்று உடல் வேறானது என்ற தனது சித்தாந்தத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

“குடம்பை தனித் தொழியப் புள்பறந் தற்றே

உடம்பொ டுயிரிடை நட்பு” (குறள்-338)

முன் தனியாத முட்டை தனித்துக் கிடப்ப, அதனுளிருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்துபோன தன்மைத்து, உடம்பிற்கும் உயிர்க்கும் முளதாய நட்பு என்பது இக்குறட் கருத்து. அதாவது, முட்டையுள் தோன்றிய புள், ஓட்டினை உடைத்துக்கொண்டு வெளிச்செல்லல்போல, உயிர் உடலினுள் தோன்றி மறையும் தன்மைத்து என்கிறது இக்குறட்பா. இதனுள் உடல் என்ற இருப்பிடத்தை வந்தடையும் உயிர், ஒரு தருவாயில் பிரிந்து செல்லக்கடவது என்ற கொள்கை பதிவு செய்யப்பட்டுள்ளது (Parimelazhagar, 1973).

## வினைப் பலனே உயிர்க்கு மறுமை தரும்

“தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்

தத்தம் வினையான் வரும்” (குறள்-63)

பெற்றோர் தம் மக்களைத் தமதென்பர். ஆயின் அம்மக்களது வினைப் பயனாலேயே அவர் பிறவி தோன்றும் என்பது இக்குறளின் விளக்கம். இதனுள் உயிர் இயற்றும் வினைப் பலன்களால் மட்டுமே அதன் மறுமை தீர்மானிக்கப்படுகிறது என்ற கொள்கை புதைந்துள்ளது.

## நல்வினையால் உயிர் தேவகதி அடையும்

“செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு” (குறள்-86)

தன்கண் சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக் கடவ விருந்தைப் பார்த்துத் தான் அதனோடு உண்ண இருப்பான், மறுபிறப்பில் தேவனாம் வானிலுள்ளார்க்கு விருந்து என்று இக்குறட்பா இயம்புகிறது. இதனுள் ‘விருந்தோம்பல்’ என்ற நல்வினையைச் செய்வோனது உயிர் மறுமையில் ‘தேவகதி’ அடையும் என்ற சித்தாந்தம் விளங்குகிறது.

## தீவினையால் உயிர் நரககதி அடையும்

“அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்

தீயுழி உய்த்து விடும்” (குறள்-168)

‘அழுக்காறு’ என்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவி, தன்னை உடையானை இம்மைக்கண் செல்வத்தைக் கெடுத்து, மறுமைக்கண் நரகத்தில் செலுத்திவிடும் என்பது இக்குறட் கருத்து. இதனுள் ‘பொறாமை கொளல்’ என்ற தீவினை செய்வோர் மறுமையில் ‘நரககதி’ அடைவர் என்ற தீவினைப் பலன் உரைக்கப்பட்டுள்ளது.

## உயிர் வீடுபெறல்

ஐம்புல அடக்கமே வீட்டிற்கு வித்து என்பதைக் கீழ்க்காண் குறட்பாவில் வள்ளுவப் பெருந்தகை தெள்ளிதின் விளக்குகின்றார்.

“உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்

வரனென்னும் வைப்பிற்கோர் வித்து” (குறள்-24)

மேலும், ஐம்புல அடக்கத்தின் மூலம் மட்டுமே வீடடைய இயலாது. வீட்டிற்குத் துறவே ஊன்றுகோல் என்பதை,

“இருமை வகைதொிந் தீண்டறம் பூண்டார்

பெருமை பிறங்கிற் றுலகு” (குறள்-23)

என்ற குறள் விளக்குகிறது (Parimelazhagar, 1973). அதாவது பிறப்பு, வீடுபேறு என்ற இரண்டனது இன்ப, துன்பக் கூறுபாடுகளை உணர்ந்தோர் துறவறத்தை மேற்கொள்வர் என்கிறது. இவ்வாறு துறவறத்தை மேற்கொள்வோர் தம் கடுந்தவத்தின் வழி வினைப்பலன்களை அழித்து வீடுபெறுவர் என்று பின்வரும் குறட்பா வினைக்கழிவிற்கான வழிவகை சொல்கிறது.

“சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பஞ்

சுடச்சுட நோற்கிற் பவர்க்கு” (குறள்-267)

தீயின்கண் ஓடும் பொன்னுக்கு அது சுடச்சுடத் தன்னோடு கலந்த குற்றம் நீங்கி, ஒளி மிகுமாறுபோல, நோற்கிற்பவர்க்குத் துன்பம் வருத்த வருத்தத் தம்மோடு கலந்த பாவம் நீங்கி ஞானம் மிகும் என்பது இக்குறட் செய்தி. இதனுள் கடும் தவத்தின் வழி பாவ வினைப்பலன் கழியும் என்ற தத்துவம் உரைக்கப்படுகிறது.

## முற்றத் துறத்தலே வீட்டிற்கு வழி

“தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி

வலைப்பட்டார் மற்றை யவர்” (குறள்-348)

முற்றத் துறந்தார் வீட்டினைத் தலைப்பட்டார். அங்ஙனம் துறவாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையுட்பட்டார் என்ற இக்குறள் விளக்கத்தின் வழி முற்றத் துறந்தாரது உயிர் மட்டுமே வீடடையும், முற்றத் துறவாதாரது உயிர் மீண்டும் பிறவியில் உழலும் என்ற கருத்து வெளிப்படுகின்றது.

“பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று

நிலையாமை காணப் படும்” (குறள்-349)

ஒருவன் இருவகைப்பற்று மற்ற பொழுதே, அப்பற்றறுதி அவன் பிறப்பை யறுக்கும். அவை யறாதபொழுது அவற்றாற் பிறந்திறந்து வருகின்ற நிலையாமை காணப்படும் என்பது இக்குறள் கூறும் செய்தி. அதாவது, துறவேற்றுக் கடுந்தவம் செய்தலின்வழி இருவினைப் பற்றறுத்த உயிர் வீடடையும் என்றும், பற்றறுக்காத உயிர் மீண்டும் பிறவியில் உழலும் என்றும் இக்குறட்பா இயம்புகின்றது.

“யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்

குயர்ந்த உலகம் புகும்” (குறள்-346)

தானல்லாத உடம்பை யானென்றும் தன்னோடியைபில்லாத பொருளை எனதென்றுங் கருதி அவற்றின்கட் பற்றுச் செய்தற் கேதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பான், வானோர்க்கும் எய்தற்கரிய வீட்டுலகத்தை எய்தும் என்பது மேற்காண் குறட் கருத்து. இதனுள் மனிதன் தன்னுடலைத் தான் என்று நினைப்பான். ஆயின் உடல் உயிரினின்று வேறானது. தன்னுடல் தானல்ல என்பதுணர்ந்து, அகப் புறப் பற்றுகளை அறுத்தோனது உயிர் வீடடையும் என்ற சித்தாந்தம் நயத்துடன் விளக்கப்பட்டுள்ளது.

## மனிதகதியில் ஆணாகப் பிறந்த உயிரே வீடுபெறற்கு உரியது

பிற சமயத் தத்துவங்களிலிருந்து சமணத் தத்துவத்தைப் பிரித்துப் பார்ப்பதற்கு, மனிதப்பிறவியில் ஆணாகப் பிறப்பெடுக்கும் உயிர் மட்டுமே வீடடையும் என்ற சமணத்தின் கொள்கை ஒன்றே போதும். திருக்குறள் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து விழுக்காடு

ஆண்களுக்கு நீதி சொல்லும் நூல். மீதமுள்ள ஐந்து விழுக்காட்டிலும் 'பெண் ஆணுக்குரியவள்' என்ற அளவிலே பெண்களுக்கு நீதி சொல்கிறது.

சான்றாக, அமைந்தாங் கொழுகான்(474), அழுக்காறுடையான்(135,167), அளவறிந்து வாழாதான்(479), அளவறியான்(414), அருங்கேடன்(210), அவனின்(526), அவனை(518), அவன்(517), அளவளா வில்லாதான்(523), அறவாழி அந்தணன்(8), ஆதிபகவன்(1), ஆராய்வான்(512), ஆற்றுவான்(150), இலன்(205,223,341), இல்லிறப்பான்(145,146), இல்வாழ்க்கை வாழ்பவன்(47), இல்வாழ்வான்(41,42,147), இவன்(517), இறைவன்(5,10), இனத்தனாய்(446), இன்னா முகத்தான்(565), இன்சொலன்(92,95), உடையவன்(112), உடையான்(381), உளன்(294), உள்ளான்(309), உறுபடையான்(498), ஊக்கமுடையான்(498), எண்குணத்தான்(9), ஒருவன்(161,181,220, 226,336,366,399,405), ஒழுகுவான்(326), ஒழுக்க மிலான்(135), ஓம்புவான்(83,84), ஓரைந்தும் காப்பான்(24), கடுஞ்சொல்லன்(386,566), கண்ணிலன்(566), கல்லாதான்(402, 404), கற்றிலன்(414), காட்சிக்கெளியன் (386), காண்பான்(99), காதலன்(209), காப்பான்(301), காவதிழுக்கியான்(535), காவலன்(560), குலனுடையான்(223), கொடுப்ப தழுக்கறுப்பான்(166), கொண்டவன்(307), கொல்லான்(260), கொழுநன்(55), கோலொடு நின்றான்(552) சிறந்தான்(515), சிறுபடையான்(498), செயற்பால செய்யா திவறியான்(437), செய்யான்(210), செய்வானை(516), செவ்வியான்(169), செறுக்கறுப்பான்(346), சூழ்ந்தவன்(204), தங்கியான்(117), தனக்குவமை இல்லாதான்(7), தன்மையான்(511), தானறிவான் (318), தான்(206,209), திரியா தடக்கியான்(124), தேரான்(508,510), நயனிலன்(192), நயனுடையான்(216,219), நல்கூர்ந்தான்(219), நன்குடையான்(513), நிலத்தறைந்தான்(307), நினைப்பானை(519), நின்றான்(176), நீங்கியான்(341), நெஞ்சத்தான்(169,181), நுண்மான் நுழைபுல மில்லான்(407), பணிவுடையன்(95), பயனில சொல்லுவான்(191), பயனில்சொல் பாராட்டுவானை(196), பற்றற்றான்(330), பாத்தூண் மரீஇ யவனை(227), பார்ப்பான்(134), பார்த்திருப்பான்(86), பிறன்(282), பிறன்பழி கூறுவான்(186), புலாலை மறுத்தானை(260), பெருங்கொடையான்(526), பெருந்தகையான்(217), பேணான்(526), பேரறிவாளன்(215), பொறிவாயில் ஐந்தவித்தான்(6,25), மகற்கு(110), மகன்(196), மலர்மிசை ஏகினான்(3), மன்னர்க்கு(556), மன்னன்(386,448,520,544), மன்னவன்(386,542,543,545,546,548,553, 558,559), மாசிலன்(34), மிசைவான்(85), வகைதெரிவான்(27), வஞ்சமனத்தான்(271), வந்தானை(530), வல்லானை(446), வாலறிவன்(2), வினைசெய்வான்(520), வினையுடையான்(519), வெங்கோலன்(563), வேண்டாதான்(163,206), வேண்டுதல் வேண்டாமை இலான்(4), வேண்டுவான்(281), வேந்தர்(390), வேந்தற்கு(382), வேந்தன்(389,528,530,549,557,564,567,568), வேந்து(550,551,561), வேலொடு நின்றான்(552), வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்(50) என்று இதுபோன்று பல்வேறு இடங்களில் திருக்குறள் முழுமைக்கும் ஆண்களுக்கான அறங்களே நீக்கமற நிறைந்துள்ளன (Thandapani Thesigar, 1950; Thandapani Thesigar, 1951).

பெண்களுக்கான நீதியுரைக்கும் திருவள்ளுவர், இல்லதென் இல்லவள்(53), இல்லவள்(53), இல்லாதாள்(402), தற்கொண்டான் வளத்தக்காள்(51), பிறர்க்குரியாள்(149), பிறனியலாள்(147), பிறன்வரையாள்(150), மகளிர்(57), மனைத்தக்க மாண்புடையள்(51), மனைமாட்சி இல்லாள்(52) என்று இதுபோன்று சில இடங்களில் மட்டும் மகளிர்க்கான அறங்களைச் சுட்டுகின்றார். அதிலும் தற்கொண்டான் வளத்தக்காள், பிறர்க்குரியாள், பிறனியலால், பிறன்வரையாள் ஆகிய சொற்களை உற்றுநோக்குகையில், பெண் ஆணுக்குரியளாகி இல்லறம் நடத்தக் கடமைப்பட்டவள் என்ற அளவிலேயே குறளாசிரியர் பெண்களுக்கான நீதியை வரையறை செய்துள்ளார்.

இங்கு ஆணா? பெண்ணா? என்ற விவாதத்திற்குச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. இவ்விடயத்தைச் சமண தத்துவப் பின்புலத்துடன் ஆராயவேண்டும். அனைத்து இடங்களிலும் ஆணை முதன்மைப்படுத்தி இயம்பப்பட்டுள்ள அறங்களில் துறவுக்கான அறங்களை ஆழமாகச் சிந்திக்கவேண்டும். சான்றாக,

> "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
>
> அதனின் அதனின் இலன்" (குறள்-341)

என்ற குறளில் பொருள்களின் மீதுள்ள பற்றினை அறுக்கும் ஆண், துறவிற்குரியவன் என்ற விதி பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதுபோன்று பல இடங்களில் ஆண் துறவிற்குரியவன் என்று திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். அவர் தமது நூலில் ஒரு இடத்தில்கூடப் பெண்

துறவிற்குரியவள் என்று சுட்டவில்லை. ஆகவே மனிதகதியில் ஆண் உடலெடுத்த உயிர், துறவேற்றுக் கடும் தவம் செய்தலின் வாயிலாக, உயிருள் கலக்க வரும் வினைகளைத் தடுத்து, ஏற்கனவே அதனுள் கலந்திருக்கும் வினைகளை உதிர்த்தால் வீடடையும் என்ற சமண தத்துவத்தை முழுமையாகத் திருவள்ளுவர் ஏற்கிறார். ஆகவே திருக்குறள் சமண சமயம் சார்ந்த நூலென்பது நிறுவப்படுகிறது. இக்கருத்தியலைத் துணைகஸகொண்டால் மட்டுமே வள்ளுவத்தின் கடவுட்கோட்பாட்டை அறிய இயலும். அதற்குமுன் பரிமேலழகர் சமணத்தின் நாற்கதி சார்ந்த சித்தாந்தத்தை ஏற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பரிமேலழகர் கூறும் சமயசாரம்

"இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்

கையாறாக் கொள்ளாதா மேல்" (குறள்-627)

இக்குறளுக்கு உரை வகுக்கும் பரிமேலழகர், நாற்கதியினுமுள்ள உடம்புகள் இடும்பையென்னும் வாளுக் கிலக்கென்று தெளிந்து, தம்மேல் வந்த இடும்பையை இடும்பையாகக் கொள்ளார் அறிவுடையர் என்கிறார். அதாவது, மனிதன், விலங்கு, நரகர், தேவர் என்று எக்கதி எடுப்பினும், அக்கதிகளில் கிட்டும் உடல் இடும்பை தருவதே என்பது இவ்வுரை கூறும் சித்தாந்தம். இங்கு நாற்கதி என்ற கோட்பாடு சமணத்திற்கே உரியது. காஞ்சி உலகளந்த பெருமாள் கோவிலின் வைணவ மரபைச் சார்ந்த பரிமேலழகர், திருக்குறளின் தத்துவம் சமணமே என்பதைத் ஆணித்தரமாகப் பதிந்துள்ளார்.

## திருவள்ளுவத்தில் கடவுட் கோட்பாடு

வள்ளுவத்தின் சமயம் சமணமென்றால் வள்ளுவர் கடவுளாக யாரைச் சுட்டுகிறார் என்ற கேள்விக்கு எளிமையாகப் பதில் கிடைத்துவிடும். சமணர் துறவியரையே கடவுளாகக் கொள்வர். வள்ளுவரும் துறவோரையே கடவுளாகச் சுட்டியுள்ளார். ஐம்புலனடக்கத்தால் துறவிற் சிறந்து, பற்றறுத்து, இருவினைப் பலன்களைக் களைந்து, வினை உயிரை வந்து கலக்கும் வழியினை அடைத்து வீடுபேறடைந்த துறவியரையே திருக்குறள் கடவுளாகப் போற்றுகிறது.

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க

நெறிநின்றார் நீடுவாழ் வார்" (குறள்-6)

ஐம்பொறிகளின் மீதான பற்றினை அறுத்தான் கூறிய நெறியின்படி வாழ்வோர் வீடடைவர் என்பது இக்குறளின் பொருள். ஐம்பொறிகள் மீது பற்று இருந்திருப்பின் மட்டுமே அப்பற்றை அறுக்கவேண்டிய தேவை இருந்திருக்கும். ஐம்பொறிகள்வழி பற்றுக் கொண்டவன் மனிதனே ஆவான். ஆகவே மனிதனாகத் தோன்றி மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களால் விளையும் பற்றினைக் கடுந்தவத்தின்வழி அறுத்த துறவியரையே திருவள்ளுவர் பொறிவாயில் ஐந்தவித்தான் என்று சுட்டுகிறார். இங்குக் கடவுள் வாழ்த்தில் சுட்டப்படும் ஐந்தவித்தான் என்ற சொல்லுக்கு விளக்கம் வேண்டுமாயின், நீத்தார் பெருமையிலுள்ள குறளைக் காணவேண்டும்.

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்

இந்திரனே சாலுங் கரி" (குறள்-25)

நீத்தார் எனில் துறவோர் என்பதே பொருள். முற்றத் துறந்த முனிவரே நீத்தார் ஆவர் என்று பரிமேலழகர் உரைக்கிறார். இங்கு 'ஐந்தவித்தான்' என்ற சொல் துறவியரைக் குறிப்பதைக் காண்க. இதற்கு மற்றொரு உதாரணத்தையும் சொல்லமுடியும்.

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்

பிறவாழி நீத்தல் அரிது" (குறள்-8)

இங்கு வள்ளுவர் கடவுளை அந்தணன் என்று சுட்டுகிறார். இங்குள்ள அந்தணன் என்ற சொல்லுக்கு அவர் வழங்கும் பொருள் காண, மீண்டும் நீத்தார் பெருமை என்ற அதிகாரமே நமக்குத் துணை செய்கிறது. அவ்வதிகாரத்துள்,

“அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்

செந்தண்மை பூண்டொழுக லான்” (குறள்-30)

என்ற குறள் துறவியரையே ‘அந்தணர்’ என்று சொல்கிறது. ஆகவே சமணத்தின் வழி துறவேற்று முத்திபெற்ற ஆண் துறவியரையே வள்ளுவர் கடவுளாகப் போற்றியுள்ளார்.

## முடிவுரை

உயிர் என்பது உள்ளது, அது உடலினின்று வேறானது, பௌதிகப் பொருள்களின் சேர்க்கையால் வினைப்பலன்களை நுகர்வதற்காக நான்கு கதிகளில் வெவ்வேறு உடல்களை அடையத்தக்கது, உயிருக்கான நிரந்தர இன்பம் பிறவிகளிலிருந்து விடுபட்டுப் பிறவாநிலை (வீடுபேறு) அடைவது, பிறவாநிலை அடைவதற்கு மனிதருள் ஆணாகப் பிறந்து துறவேற்றுக் கடுந்தவமியற்றல் வேண்டும், அவ்வாறு கடுந்தவமியற்றும் ஆண் துறவியரே கடவுளராகப் போற்றப்படுவர் என்றவாறான சமணசித்தாந்த சாரங்களின் அடிப்படையில் திருக்குறளின் மெய்யியல் கட்டமைக்கப்பட்டுள்ளது. எனவே சமணமே திருக்குறளின் சமயம் என்பதும், திருவள்ளுவர் சமணத் துறவியரையே கடவுளராகப் பாவிக்கிறார் என்பதும் இக்கட்டுரையின் வாயிலாக நிறுவப்படுகிறது. மேலும் வேறெந்தச் சமயத்தின் தத்துவ விசாரமும் திருக்குறளில் வெளிப்படையாகத் தோன்றவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## References

Parimelazhagar, (1973) Thirukkural moolanum Parimelazhagar Uraium, The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Ltd. India

Thandapani Thesigar, S. (1950) Thirukkural - Uraivalam (Arathuppaal), Ganasampantham Pathippagam, Tharumapuram, Mayuram, Indias

Thandapani Thesigar, S. (1951) Thirukkural - Uraivalam (Porutpaal), Ganasampantham Pathippagam, Tharumapuram, Mayuram, India

Varatharasanaar, M. (1994), Thirukkural Thelivurai, The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Ltd. India

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2026. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

P. Praburam, The Philosophy of Thiruvalluvar and the doctrine of God, Indian Journal of Tamil, 7(1), (2026) 9-15. https://doi.org/10.54392/ijot2562